JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 207/2017 |
| | : | Prosecution P.W - 7 |
| NAME | : | மரகதமணி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 17.03.2026.

முதல் விசாரணை

நான் தற்போது குமந்தாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். எதிரி பாப்பாத்தியை தெரியும். அவர் என் வீட்டிற்கு எதிர்த்த வீட்டுக்காரர். அசா.1 முத்தாத்தாள் என் அண்ணி, அசா.2 வெள்ளதுரை என் அண்ணன், அசா.3 பார்வதி என் உறவினர். தேதி, மாதம் நினைவில் இல்லை. கடந்த 10 வருடங்களுக்கு முன்பு என் அண்ணி அசா.1 முத்தாத்தாளும், எதிரி பாப்பாத்தியும் சண்டை போட்டுள்ளார்கள். நான் சம்பவம் கேள்விப்பட்டு வந்து பார்த்த போது அசா.1 அடிபட்டு கிடந்தார். அசா.1 க்கு தலை மற்றும் கையில் அடிபட்டிருந்தது உடனே நான் ஆட்டோ மூலம் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலிசார் அங்கு வந்து என்அண்ணி முத்தார்த்தாளிடம் வாக்குமூலம் வாங்கினார்கள். அதில் நான் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என் வீடு வேறு தெருவில் உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கும், என் அண்ணி வீட்டிற்கும் இடையே 15 வீடுகள் இருக்கும். சம்பவத்தை பற்றி யார் சொன்னார்கள் என்று தெரியாது. அசா.1, அசா.2 என் அண்ணன், அண்ணி என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. என் அண்ணியை நான் தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். நான் அழைத்து சென்றதாக போலிஸ் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். எதிரி பாப்பாத்திக்கும், முத்தார்த்தாளுக்கும் முன் பகை உண்டு என்றால் தெரியாது. கையெழுத்து காவல் நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதி உள்ளது என எனக்கு தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் அசா.1, அசா.2 என் உறவினர்கள் என்பதாலும் பாப்பாத்திக்கும், ஜெயபாலுக்கும் இடையே வேறு வழக்கு உள்ள நிலையில் அதை அனுசரித்தும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. அசா.1 மருத்துவரிடம் தானாக வந்ததாக தான் சொல்லி உள்ளார் என்றாலும் அதை மறைத்து நான் அழைத்து சென்றேன் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அழைத்து சென்ற ஆட்டோ எண் தெரியாது. எங்குள்ள ஆட்டோ என தெரியாது. நான் ஆட்டோவில் அழைத்து செல்லவில்லை என்றாலும் அதனால் தான் ஆட்டோ எண் மற்றும் எங்குள்ள ஆட்டோ என எனக்கு தெரியவில்லை என்றாலும் ஆஜர் எதிரிக்கும், வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi